**SC NO.27/2020 Date:07.02.2025**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )**

**சாட்சியாகிய திரு. நாகராஜன் என்ற Pw3 நபரின் வாக்குமூலம் (1876ம் ஆண்டின் 10 விதியின் Tr.A.Pachaiyappan, இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்**

**செய்யப்படுகிறது.**

**பெயர் - திரு. நாகராஜன்**

**த/பெ, - திரு. சேசய்யா**

**வயது - 28/2025**

**தொழில் - தனியார் நிறுவனத்தில் மின்பணியாளர்**

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருபெரும்பத்தூர் வட்டம், கருமாகழனி, கக்கன் சாலையில் எண் 204 என்ற விலாசத்தில் வசித்து வருகிறேன். தனியார் நிறுவனத்தில் மின் பணியாளராக வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன சபரிநாத் என்பவரை எனக்கு தெரியும். 1, 2 எதிரிகளை எனக்கு தெரியும், எங்கள் ஊர்காரர்கள். 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் மாம்பாக்கத்தில் உள்ள சுபேர் எலக்ட்ரிக்கல் நிறுவனத்தில் பணி செய்துவிட்டு இரவு 8 மணிக்கு என் வீட்டிற்கு வந்து சாப்பிட்டுக்கொண்டுருந்தேன். அப்போது திருபெரும்பத்தூர் காவல் நிலையத்திலிருந்து வந்து ஜே.கே. கல் குவாரியில் சபரிநாத் என்பவர் இறந்து கிடப்பதாகவும் அந்த சம்பவம் பற்றி தெரியுமா என்று கேட்டார்கள். காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். விசாரித்து விட்டு கையொப்பம் வாங்கிக்கொண்டு அனுப்பிவிட்டார்கள். பின்பு போலிசார் என்னிடம் வெங்கடேகன், ராஜ்குமார் ஆகியோர் சபரிநாத்தை வெட்டிவிட்டதாக சொன்னார்கள்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 27 4 2019 ஆம் தேதி காலை 8 மணிக்கு நீங்கள் கம்பெனி வேலைக்கு சென்று விட்டு மாலை 4:30 மணிக்கு உங்கள் வீட்டிற்கு வந்த போது உங்கள் அம்மா செல்வம் கிட்னி பெயிலினால் இறந்து விட்டதாக தகவல் சொன்னதின் பேரில் ராஜ்குமார் என்பவர் உங்கள் வீட்டிற்கு வந்து இறந்த செல்வத்திற்கு சுங்குவார்சத்திரம் சென்று மாலை வரும் வாங்கி வருவதாக சொல்லிவிட்டு உங்களுடைய டிஎன் 87 29 99 பதிவு எண் உள்ள pulsar பைக்கை வாங்கி சென்றதாகவும் மாலை 6:30 மணிக்கு ராஜ்குமார் வீட்டின் பின்னாடி இருந்து சத்தம் கேட்டவுடன் நீங்களும் உங்க அம்மாவும் அங்கு ஓடி சென்று பார்த்ததாகவும் நாகராஜன் சத்தம் கேட்டு அந்த ஓடி வந்தார் என்றும் அப்போது வேப்ப மரத்தடியில் ராஜ்குமார் கையில் கட்டி வைத்துக்கொண்டு சபரிநாதனை வெட்டினான் என்றும் அருகில் வெங்கடேசன் என்று கொண்டுதான் என்றும் சபரிநாதன் என்னை வெட்டாதீங்க என்று சத்தம் போட்டுக்கொண்டு ஓடினார் என்றும் அவர் பின்னாடியே ராஜ்குமார் வெங்கடேசன் விடாமல் துரத்தி சென்றார்கள் என்றும் நீங்கள் பயந்து கொண்டு உங்கள் வீட்டிற்கு திரும்பி வந்து விட்டதாகவும் கொஞ்ச நேரம் கழித்து ராஜ்குமாரும் வெங்கடேசனும் அவர்களுடைய டிரஸ்ஸில் ரத்தக்கரையுடன் வந்து உங்களுடைய பைக்கை நிறுத்திவிட்டு சென்றார்கள் என்றும் பின்பு சபரிநாதன் இவர்கள் தான் வெட்டி கொலை செய்திருப்பது தெரிந்து கொண்டீர்கள் என்றும் இது சம்பந்தமாக திரும்பதூர் காவல் ஆய்வாளர் ஆய்வாளர் அவர்கள் உங்களை விசாரித்ததில் சம்பவத்தை நேரில் பார்த்ததை கூறிவிட்டு தற்பொழுது குற்றவாளிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை